| DEPOSITION OF WITNESS<br>(Chapter XXIII code of Criminal Procedure)<br>IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, MANAPPARAI<br>Present : Thiru.R.Ashokumar, B.com.,B.L.<br>Judicial Magistrate, Manapparai | |
|---|---|
| Date: 08.04.2026 | |
| CC No. 109/2023 | |
| சாட்சி :PW6 | |
| பெயர் : திருமதி. மணமல்லி | ஜாதி : |
| த/பெ/க/பெ. : திரு.ராஜேந்திரன் | தொழில் : காவல் ஆய்வாளர் |
| கிராமம் : | சமயம் : |
| தாலுக்கா : | வயது : 45/2026 |
| ( எதிரிகள் ஆஜர், வழக்கறிஞர் ஆஜர்) | |

-----------------------------------------------------------

**<u>அரசு தரப்பு முதல் விசாரணை</u>**

1. நான் தற்போது அரியலூர் மாவட்டம், அரியலூர் காவல்நிலையத்தில் காவல் ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 25.03.2021 ம் தேதி 17.00 மணிக்கு நான் மணப்பாறை அனைத்து மகளிர் காவல்நிலையத்தில் காவல் ஆய்வாளராக நிலைய பொறுப்பிலிருந்த போது 23.03.2021 ம் தேதி 13.10 மணிக்கு மணப்பாறை அனைத்து மகளிர் காவல்நிலைய முதல்நிலை காவலர் 1234 தங்கமணி என்பவர் நிலையத்தில் இருந்த போது வைரம்பட்டி, மணப்பாறை தாலுகா, ஆறுமுகம் மனைவி ராணி என்பவர் கொடுத்த புகாரை பெற்று மனு ரசீது 96/2021 கொடுத்து விசாரணைக்கு எனது பார்வைக்கு வைக்கப்பட்டிருந்ததை பார்வையிட்டு விசாரணைக்கு பின் மணப்பாறை அனைத்து மகளிர் காவல்நிலைய குற்ற எண். 8/2021 u/s.498(A),294(b),506(1) IPC ன் படி வழக்கு பதிவு செய்தேன். **அந்த முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

**2.** அன்றைய தினமே வழக்கை விசாரணைக்கு எடுத்துக்கொண்டு சம்பவ இடம் சென்று பார்வையிட்டு சாட்சிகள் ராணி, காளியம்மாள் ஆகியோர்களை தனித்தனியாக விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். சம்பவம் உண்மை என்பதால் கிடைத்த ரகசிய தகவலின் படி 25.03.2021 ம் தேதி 18.00 மணிக்கு எதிரி ஆறுமுகம் என்பவரை மணப்பாறை பஸ்டாப் அருகே காரணம் கூறி கைது

செய்து எதிரியை காவல்நிலையம் அழைத்து வந்து திரேக பரிசோதனை செய்து பாராவசம் ஒப்புவித்து பின்னர் காவலர் மூலம் நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தினேன்.

3. 24.04.2021 அன்று சாட்சிகள் மயில்வாணன், ராஜ்குமார், செல்வராஜ், சாமிநாதன், சுப்பிரமணி, சக்திவேல் ஆகியோர்களை தனித்தனியாக விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். 29.04.2021 ம் தேதி இவ்வழக்கில் தலைமறைவான எதிரி தங்கரெத்தினம் என்பவருக்கு திருச்சி மாவட்ட முதன்மை நீதிமன்றத்தில் கிடைக்கபெற்றது. 10.05.2021 அன்று இவ்வழக்கில் அனைத்து சாட்சிகளையும் விசாரித்து முடித்த நிலையில் சாட்சிகளின் வாக்குமூலத்திலிருந்து எனது ரகசிய புலன் விசாரணையிலிருந்து சம்பவம் உண்மை என்பதால் எதிரிகள் மீது பிரிவு u/s.498(A),294(b),506(1) IPC ன் படி குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்தேன்.

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை**

4. குற்ற நிகழ்வு நாள் 18.03.2021 ம் தேதி நேரம் 18.00 மணி என்றால் சரிதான். காவல்நிலையத்திற்கு தகவல் கிடைத்தது 25.03.2021 ம் தேதி, 17.00 மணி என்றால் சரிதான். நான் அன்றைய தினமே முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தேன் என்றால் சரிதான். குற்ற நிகழ்வு திண்டுக்கல் மாவட்டம், சாரணப்பட்டி யூனியன், புகையிலைப்பட்டி 2ம் எதிரியின் வீட்டின் முன்புறம் என்றால் சரிதான். காவல்நிலையத்திற்கும், சம்பவ இடத்திற்கும் எவ்வளவு தூரம், என்றால் சுமார் 40 கி.மீ தூரம் எந்த திசையில் என்றால் மேற்கு திசையில் உள்ளது.

5. 1ம் எதிரி இவ்வழக்கில் புகார்தாரரின் மனைவி என்றால் சரிதான். 2ம் எதிரி புகார்தாரரின் அக்கா என்றால் சரிதான். புகாரை வாங்கி மனு ரசீது எந்த தேதியில் போட்டேன் என்றால் 24.03.2021 அன்று புகார்தாரருக்கு மனு ரசீது வழங்கப்பட்டது என்றால் சரிதான். புகார் வாக்குமூலம் பெற்ற பின்பு எத்தனை நாள் கழித்து முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தேன் என்றால் 25.03.2021 அன்று பதிவு செய்யப்பட்டது. காலதாமத்திற்கான காரணம் பற்றி புகார்தாரர் காலதாமதமா, எங்களது காலதாமதமா என்றால் விசாரணை செய்து வழக்கு பதிவு செய்தேன். காலம் –8 ல் குற்றமுறையீட்டாளர் தகவல் கொடுப்பதில் கால தாமதம் ஏற்பட்டது என்றால் சரிதான்.

6. முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டு நீதிமன்றத்திற்கு அனுப்பட்ட நாள் 25.03.2021 ம் தேதி, 21.40 மணி என்றால் சரிதான். இவ்வழக்கில் புகாரில் அரைபவுன் தாலி, குண்டு அரைபவுன், தோடு சிமிக்கி மூக்கால் பவுன், பீரோவை உடைத்து 3 பவுன் செயின், 2 பவுன் குழாய் ஆகியவற்றிற்கான ரசீதுகளையோ, ஆவணங்களையோ கைப்பற்றி நீதிமன்றத்தில் ஒப்படைத்துள்ளேனா என்றால்

இல்லை. அ.சா.1, 2 ஐ எந்த தேதியில் எத்தனை மணிக்கு எங்கு வைத்து விசாரித்தேன் என்றால் 25.03.2021 ம் தேதி, காவல்நிலையத்தில் விசாரித்தேன் நேரம் ஞாபகமில்லை.

7. இந்த புகாரை பெற்று எந்த தேதியில் புலன் விசாரணையை தொடங்கி எந்த தேதியில் முடித்து நீதிமன்றத்திற்கு எந்த தேதியில் எனது இறுதி அறிக்கையை அனுப்பி வைத்தேன் என்றால் 25.03.2021 ம் தேதி, 17.00 மணிக்கு 10.05.2021 அன்று முடித்து நீதிமன்றத்தில் இறுதி அறிக்கை தாக்கல் செய்தேன். நீதிமன்றத்தில் இறுதி அறிக்கை அறிக்கை வரப்பெற்ற நாள் 18.08.2023 என்றால் சரிதான். அ.சா.3 முதல் 8 வரையிலான சாட்சிகளை எந்த தேதியில் எத்தனை மணிக்கு எங்கு வைத்து விசாரித்தேன் என்றால் 24.03.2021 ம் தேதி, காவல்நிலையத்தில் விசாரித்தேன்.

8. பட்டியல் சாட்சிகள் 1 முதல் 7 வரையிலானவர்கள் உறவினர்கள் என்று எனது விசாரணையில் தெரிந்துக்கொண்டேனா என்றால் தெரிந்துக்கொண்டேட்ன. அ.சா.2 முதல் 7 வரையிலான சாட்சிகள் ஒரே ஊர்க்காரர்கள் என்றால் சரிதான். இந்த வழக்கின் புகாரை யார் எழுதினார்கள் என்று எனது விசாரணையில் தெரிந்து கொண்டேனா என்றால் இல்லை. அ.சா.1 புகார் கொடுக்கும் அவருடன் யார் யார் உடன் வந்தார்கள் என்று எனது விசாரணயில் தெரிந்துக்கொண்டேனா என்றால் இல்லை. அ.சா.1 க்கும், 1ம் எதிரிக்கும் 3 குழந்தைகள் உள்ள நிலையில் அவர்கள் என்ன படிக்கிறார்கள், எந்த பள்ளியில் படிக்கிறார்கள் என்ற விபரத்தை எனது விசாரணையில் தெரிந்து கொண்டேனா என்றால் விசாரித்தேன், பதிவு செய்யவில்லை.

9. அ.சா.1 புகாரில் புகார்தாரருக்கும், கணவருக்கும் ஏற்பட்ட கருத்து வேறுபாடு ஏற்பட்டு சண்டை, சச்சரவு இருந்ததை பஞ்சாயத்து செய்து வைத்தார்கள் என்று சொல்லியுள்ளதற்கு யார் யார் பஞ்சாயத்து செய்து வைத்தார்கள் என்ற விபரத்தையும், அவர்களை இந்த வழக்கில் சாட்சியாக சேர்த்துள்ளேனா என்றால் சேர்த்துள்ளேன். அவர்களின் பெயர் சொல்ல முடியுமா என்றால் முடியும். அவர்கள் சக்திவேல், சுப்பிரமணி. மேற்படி இருவரும் 1ம் எதிரியின் பக்கத்து வீட்டுக்காரர்கள் என்பதை எனது விசாரணையில் தெரிந்து கொண்டேனா என்றால் இல்லை.

10. இந்த புகாரில் 1ம் எதிரி, 2ம் எதிரி புகார்தாரரை திட்டியுள்ளார்கள் என்று சொல்லியுள்ளதற்கு என்னென்ன கெட்ட வார்த்தைகள் சொல்லி திட்டினார்கள் என்று புகார் வாக்குமூலத்தில் சொல்லவில்லை என்றால் சரிதான். இந்த வழக்கில் 1ம் எதிரியும், 2ம் எதிரியும் எந்தவிதமான கள்ள உறவில் இல்லை என்றும், அ.சா.1, 1ம் எதிரி மீது ஏற்பட்ட கருத்து வேறுபாடு, காழ்ப்புணர்ச்சி காரணமாகவும் ஒரு பொய்யான புகாரின் அடிப்படையில் தவறான பழக்கம்

இருப்பதாக கூறியிருப்பது வழக்கிற்காக பொய்யாக சொல்லியுள்ளார் என்றும் அவர் சொல்வதுபோல் எந்தஒரு நிகழ்வும் நடைபெறவில்லை என்றால் சரியல்ல. 1ம் எதிரிக்கும், 2ம் எதிரிக்கும் தவறான பழக்கம் இருப்பதாக காளியம்மாள், மயில்வாகணன் ஆகியோர்களிடம் நான் எப்போது எந்த தேதியில், எங்கு வைத்து விசாரித்து தெரிந்துடக்கொண்டேன் என்றால் காவல்நிலையத்தில் வைத்து தெரிந்துக்கொண்டேன்.

11. அ.சா.1 ஐ, 1, 2 எதிரிகள் எந்தவிதமான கெட்ட வார்த்தைகள் சொல்லி திட்டவில்லை என்றும், எந்தவிதமான கொலைமிரட்டல் விடுக்கவில்லை என்றால் சரியல்ல. அ.சா.1 என்பவர் 1ம் எதிரி மீது எத்தனை முறை எந்தெந்த காவல்நிலையத்தில் புகார் கொடுத்தார் என்ற விபரத்தை எனது விசாரணையில் தெரிந்து கொண்டேனா என்றால் ஞாபகமில்லை. ஞாபகமில்லை என்பது வழக்கிற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. இந்த வழக்கின் சம்பவ இடமானது திண்டுக்கல் மாவட்டம், சாரணப்பட்டி யூனியன்,புகையிலைப்பட்டி என்பதால் இந்த வழக்கின் சாரம்சம் எல்லாம் திண்டுக்கல் மாவட்டம் அதிகார எல்லைக்கு உட்பட்டது என்ற விபரத்தை எனது விசாரணையில் தெரிந்து கொண்டேனா என்றால் தெரிந்துக்கொண்டேன். மேற்படி அதிகார ஆள்வரை அனைத்துமே திண்டுக்கல் மாவட்டம் என்பதால் இந்த வழக்கு பதிவு செய்யப்பட்டு திண்டுக்கல் காவல்நிலையத்தில் வழக்கு பதிவு செய்திருக்க வேண்டுமென்றும் மணப்பாறை காவல்நிலையத்தில் வழக்கு பதிவு செய்திருப்பது சட்டப்படி தவறு என்றால் சரியல்ல. உண்மையிலியே சம்பவம் நடந்திருந்தால் சம்பவ இடமான காவல்நிலைய சரகமான திண்டுக்கல் மாவட்டம், அனைத்து மகளிர் காவல்நிலையம் அதிகார ஆள்வரை சரகத்தில் அ.சா.1 புகார் கொடுத்து வழக்கு பதிவு செய்திருப்பார் என்றும் அப்படி ஒரு சம்பவம் நடக்கவில்லை என்பதால் தான் அ.சா.1 அதிகார ஆள்வரையை மாற்றி தங்களிடம் புகார் கொடுத்து அதற்கு வழக்கு பதிவு செய்து அதற்கு ஆதாரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

12.இந்த சம்பவத்திற்கு முன்பாக அ.சா.1 க்கும், அவரது குழந்தைகளுக்கும் 1ம் எதிரி வீட்டிற்கு தேவையான அத்தியாவசிய பொருட்களை பூர்த்தி செய்து நல்ல முறையில் கவனித்து வந்தார் என்ற விபரத்தை எனது விசாரணையில் தெரிந்துகொண்டேனா என்றால் எதுவும் செய்யவில்லை என்று அ.சா.1 சொன்னார். நான் சொல்வதுபோன்று சொன்ன தேதியில், சொன்ன இடத்தில் சம்பவம் நடக்கவில்லை என்றும் அ.சா.1 க்கும், 1ம் எதிரிக்கும் ஏற்பட்ட கருத்து வேறுபாடு காரணமாக நடக்காத சம்பவத்தை நடந்ததாக அரங்கேற்றி சம்பவத்தை மிகைப்படுத்தி அ.சா.1 கொடுத்த பொய் புகாரின் அடிப்படையில் வழக்கு பதிவு செய்து தங்களுக்கு கீழ் பணிபுரியும் அலுவலர்களை வைத்து அனைத்து ஆவணங்களும் காவல்நிலையத்தில் வைத்து தயார் செய்து அதன் அடிப்படையில் நான் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

13. சம்பவ இடத்திற்கு எந்த தேதியில், எத்தனை மணிக்கு சென்றேன் என்றால் 25.03.2021 அன்று சென்றேன், நேரம் ஞாபகமில்லை. சம்பவ இடத்திற்கு சொந்த வாகனத்தில் சென்றேனா அல்லது அலுவலகம் வாகனத்தில் சென்றேனா என்றால் அலுவலக வாகனத்தில் சென்றேன். திண்டுக்கல் சம்பவ இடத்திற்கு நான் செல்ல வேண்டும் என்றால் ஒன்றரை மணிநேரம் ஆகும் என்றால் சரிதான். நான் சம்பவ இடம் செல்லவில்லை என்றும், சாட்சிகள் யாரையும் விசாரிக்கவில்லை என்றும் பழைய கோப்புகளின் அடிப்படையில் அனைத்து ஆவணங்களும் காவல்நிலையத்தில் வைத்து தயார் செய்து எதிரிக்கு எதிராக குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. இந்த வழக்கிற்கும், எதிரிகளுக்கும் எந்தவித சம்மந்தமும் இல்லை என்றால் சரியல்ல. 1ம் எதிரி சொன்ன இடத்தில், சொன்ன நேரத்தில் வைத்து எதிரியை கைது செய்யவில்லை என்றால் சரியல்ல.

Taken over by me in open court read over to the witness and admitted by the witness to be correct.

Sd/–R.Ashokumar,B.com.,B.L.,
Judicial Magistrate,
Manapparai.